# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஏழாம் பத்து

## எட்டாம் திருவாய்மொழி - மாயா வாமனனே
## பிரிவால் மாயாதபடி தம்மை வைத்த விசித்திர சக்தியுடைய எம்பெருமானது விசித்திர விபூதியை அவன் காட்டக் கண்டு ஆழ்வார் ஆச்சரியப்படுதல்

** மாயா! வாமனனே! * மதுசூதா! நீ அருளாய் *
தீயாய் நீராய் நிலனாய் * விசும்பாய்க் காலாய் **
தாயாய் தந்தையாய் * மக்களாய் மற்றுமாய் முற்றுமாய் *
நீயாய் நீ நின்ற ஆறு * இவை என்ன நியாயங்களே! 1

அங்கண் மலர்த் தண் துழாய் முடி * அச்சுதனே! அருளாய் *
திங்களும் ஞாயிறுமாய்ச் * செழும் பல் சுடராய் இருளாய் **
பொங்கு பொழி மழையாய்ப் * புகழாய்ப் பழியாய்ப் பின்னும் நீ *
வெங்கண் வெங்கூற்றமுமாய் * இவை என்ன விசித்திரமே! 2

சித்திரத் தேர் வலவா! * திருச் சக்கரத்தாய்! அருளாய் *
எத்தனை ஓர் உகமும் * அவையாய் அவற்றுள் இயலும் **
ஒத்த ஒண் பல் பொருள்கள் * உலப்பில்லனவாய் வியவாய் *
வித்தகத்தாய் நிற்றி நீ * இவை என்ன விடமங்களே! 3

கள் அவிழ் தாமரைக் கண் * கண்ணனே! எனக்கொன்று அருளாய் *
உள்ளதும் இல்லதுமாய் * உலப்பு இல்லனவாய் வியவாய் **
வெள்ளத் தடங்கடலுள் * விட நாகணை மேல் மருவி *
உள்ளப் பல் யோகு செய்தி * இவை என்ன உபாயங்களே! 4

பாசங்கள் நீக்கி என்னை * உனக்கே அறக் கொண்டிட்டு நீ *
வாச மலர்த் தண் துழாய் முடி * மாயவனே! அருளாய் **
காயமும் சீவனுமாய்க் * கழிவாய்ப் பிறப்பாய்ப் பின்னும் நீ *
மாயங்கள் செய்து வைத்தி * இவை என்ன மயக்குக்களே! 5

மயக்கா! வாமனனே! * மதி ஆம் வண்ணம் ஒன்று அருளாய் *
அயர்ப்பாய்த் தேற்றமுமாய் * அழலாய்க் குளிராய் வியவாய் **
வியப்பாய் வென்றிகளாய் * வினையாய்ப் பயனாய்ப் பின்னும் நீ *
துயக்கா நீ நின்ற ஆறு * இவை என்ன துயரங்களே! 6

துயரங்கள் செய்யும் கண்ணா! * சுடர் நீள் முடியாய்! அருளாய் *
துயரம் செய் மானங்களாய் * மதன் ஆகி உகவைகளாய் **
துயரம் செய் காமங்களாய்த் * துலையாய் நிலையாய் நடையாய் *
துயரங்கள் செய்து வைத்தி * இவை என்ன சுண்டாயங்களே! 7

என்ன சுண்டாயங்களால் * நின்றிட்டாய்? என்னை ஆளும் கண்ணா! *
இன்னதோர் தன்மையை என்று உன்னை * யாவர்க்கும் தேற்ற அரியை **
முன்னிய மூவுலகும் * அவையாய் அவற்றைப் படைத்து *
பின்னும் உள்ளாய்! புறத்தாய்! * இவை என்ன இயற்கைகளே! 8

என்ன இயற்கைகளால் * எங்ஙனே நின்றிட்டாய்? என் கண்ணா! *
துன்னு கர சரணம் முதலாக * எல்லா உறுப்பும் **
உன்னு சுவை ஒளி * ஊறொலி நாற்றம் முற்றும் நீயே *
உன்னை உணர உறில் * உலப்பில்லை நுணுக்கங்களே 9

இல்லை நுணுக்கங்களே * இதனில் பிறிது என்னும் வண்ணம் *
தொல்லை நன்னூலில் சொன்ன * உருவும் அருவும் நீயே **
அல்லித் துழாய் அலங்கல் * அணி மார்ப! என் அச்சுதனே! *
வல்லதோர் வண்ணம் சொன்னால் * அதுவே உனக்காம் வண்ணமே 10

** ஆம் வண்ணம் இன்னது ஒன்றென்று * அறிவது அரிய அரியை *
ஆம் வண்ணத்தால் * குருகூர்ச் சடகோபன் அறிந்து உரைத்த **
ஆம் வண்ண ஒண்தமிழ்கள் * இவை ஆயிரத்துள் இப்பத்தும் *
ஆம் வண்ணத்தால் உரைப்பார் * அமைந்தார் தமக்கு என்றைக்குமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---